இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம்
மட்டம் 06
இறுதிப் பரீட்சை - 2011/2012
**LWU 3325/4325 –சர்வதேச மனித உரிமைகள் சட்டம்**

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 31.03.2012 நேரம்: பி.ப 1.30 – பி.ப 4.30

நான்கு(04) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
முதலாவது (01) வினாவுக்கும் ஏனைய மூன்று(03) வினாக்களுக்கும் விடை தருக.

தெளிவற்ற கையெழுத்துக்களுக்காக பரீட்சார்த்திகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

01. திரு. ரொனால்ட் தனது மகன் சார்பாக உஸ்கிஸ்தான் அரசுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தனிப்பட்ட தொடர்பு ஒன்றை சமர்பிக்க உத்தேசிக்கின்றார். அவர் மனித உரிமைகள் பிரச்சினைகளை கையாளும் "மனித உரிமைகளுக்கான மன்றம்" என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் ஆலோசனையை நாடுகின்றார். மனித உரிமைகளுக்கான மன்றத்தில் கடமையாற்றும் சட்டத்தரணி என உம்மை கருதி பின்வரும் ஆவணங்களை வரைக.

(அ) மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தனிபட்ட தொடர்பை சமர்ப்பிக்கும் முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனைகளை கொண்ட ஓர் ஆவணம்.
(10 புள்ளிகள்)

(ஆ) திரு. ரொனால்ட்டினால் வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாக கொண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு தனிப்பட்ட தொடர்பு.
(15 புள்ளிகள்)

<u>வழக்கின் நிகழ்வுகள்</u> :

ஆயுதங்கள், துப்பாக்கி குண்டுகள் மற்றும் வெடிப்பொருட்கள் என்பவற்றை பயன்படுத்தி கொள்ளைச் செயல் ஒன்றில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் டேவிட் 2005ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9ம் திகதி உஸ்கிஸ்தானின் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் பொலிஸ் அலுவலர்களினால் கைது செய்யப்பட்டார். கைதுக்கான பிடியாணை ஒன்று பிறப்பிக்கப்படாத அதே வேளை கைது செய்தமைக்கான காரணங்கள் அறிவிக்கப்படவில்லை. கைதின் பின்பு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை பெறும் பொருட்டு டேவிட் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார். மூன்று நாட்கள் உணவு வழங்கப்படாமல் இருந்ததுடன் குடும்பத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட பொதிகள் அவரிடம் கையளிக்கப்படவில்லை. மேலும் டேவிட் உடைய உறவினர்கள் அவரை பார்க்க அனுமதிக்கப்படவில்லை. டேவிட் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வழங்காவிட்டால் அவருடைய குடும்பம் பாரதூரமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் என பலமுறை எச்சரிக்கப்பட்டார். திரு. ரொனால்ட் தனது மகன் சார்பாக உஸ்கிஸ்தானின் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டார். அதனை அடுத்து முறைப்பாட்டை வாபஸ் பெறுமாறு பொலிஸாரினால் அச்சுறுத்தப்பட்டான். இதன் விளைவாக முறைப்பாடு வாபஸ் பெறப்பட்டது. தாக்குதல் மற்றும் மனரீதியான அழுத்தம் என்பவற்றை தாக்குபிடிக்க இயலாத டேவிட் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை பொலிஸாருக்கு வழங்கினார். அதன் பின்பு அவர் 2005ம் ஆண்டு ஆகஸ்ட் 16ம் திகதி நீதிமன்றம் ஒன்றின் முன்பு ஒப்படைக்கப்பட்டார்.

உஸ்கிஸ்தான் சட்டமாதிபர் திணைக்களத்தினால் டேவிட்டுக்கு எதிராக குற்றப்பத்திரம் ஒன்று வழங்கப்பட்டது. வழக்கு விசாரணையின் போது டேவிட் உடைய சான்றிதழ்கள் மற்றும சாட்சிகள் என்பன புறக்கணிக்கப்பட்டன. அரசதரப்பு, சாட்சிகள் மீது அழுத்தம் மேற்கொண்டதுடன் டேவிட் உடைய சட்டத்தரணிகளுக்கு, குறுக்கு விசாரணை மேற்கொள்ளுவதற்கான சந்தர்ப்பம் ஒன்று வழங்கப்படவில்லை. நீதிமன்றம் சுயாதீனமாகவும், பாராபட்சமற்ற வகையிலும் செயற்பட தவறியது. விசாரணையின் முடிவில் டேவிட்டுக்கு 20 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

02. "... பிள்ளையொன்று அவசியமான சம்மதத்தை வழங்குதலானது பிள்ளையுடைய பக்குவம், விளக்கம் மற்றும் தேவையான சம்மதத்தின் இயல்பு என்பவற்றில் தங்கியுள்ளது. பிள்ளையொன்று பிரரேரிக்கப்பட்ட கவனிப்பினுடைய நன்மைகள் மற்றும் தீமைகள் என்பன தொடர்பாக நியாயமான மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ளுமாக இருந்தால் வழங்கப்பட்ட சம்மதம், உண்மையான சம்மதம் என்றவாறு முறையாகவும், நியாயமாக விபரிக்கப்படலாம்."

Gillick v Norfork and Wishech Area Health Authority (1986) A.C. 112.

'பிள்ளையுடைய சம்மதம்' என்ற கருத்தேற்பின் பின்னணியில் இக்கூற்றை விமரிசித்து மதிப்பிடுக. சிறுவர் உரிமைகள் சமவாயம் மற்றும் அவசியமான இடங்களில் தீர்ப்புச்சட்டங்கள் என்பவற்றுடன் விடையை ஆதாரப்படுத்துக.

(25 புள்ளிகள்)

03. "சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள குறைநிரப்பு நியாயாதிக்க கோட்பாடு (Principle of Complementarity) அங்கத்துவ நாடுகள் பாரதூரமான சர்வதேச குற்றங்களின் மீறல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இயலாத அல்லது எடுக்க விரும்பாத சூழ்நிலைகளின் கீழ் சாத்தியமான ஒரு வழிவகையை வழங்க உத்தேசித்துள்ளது."

மேலே தரப்பட்ட கூற்றின் பின்னனியில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் கீழ் நிறுவப்பட்டுள்ள நியாயாதிக்க கோட்பாட்டின் நன்மை தீமைகளை ஏற்கனவே தாபிக்கப்பட்ட தற்காலிக குற்றவியல் சபைகளின் நியாயாதிக்க கோட்பாட்டுடன் ஒப்பிட்டு ஆராய்க.

உமது விடையை ஆதாரப்படுத்தி இயைபான சட்ட ஏற்பாடுகளை குறிப்பிடுக.

(25 புள்ளிகள்)

04. ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைக்கு எதிரான சமவாயத்தின்(1984) உறுப்புரை 19க்கு அமைய சித்திரவதைக்கு எதிரான ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கும் பொருட்டு கால ஒழுங்குடைய அறிக்கை (Periodic Report) ஒன்றை சமர்ப்பிக்க உத்தேசிக்கும் இலங்கை அரசாங்கம் நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றை நியமித்தது. அந்த நிபுணர்கள் குழுவில் அங்கத்துவம் வகிக்கும் ஒரு நிபுணர் என உம்மை கருதி குறிப்பிட்ட அறிக்கையின் ஒரு பகுதியாக "ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைக்கு எதிரான உடன்படிக்கை(1984) யின் கீழ் ஏற்றுக்கொண்ட கடப்பாடுகளுக்கு வலுக்கொடுக்க இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்" என்ற தலைப்பில் ஆவணம் ஒன்றை வரைய உமக்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆவணத்தை வரைக. உமது விடை இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட சட்டம், நிறுவன ரீதியான உடனான மற்றும் ஏனைய நடவடிக்கைகளின் உள்ளடக்க வேண்டும்.

(25 புள்ளிகள்)

05. ட்ரொபிகானா என்ற அரசு பல்வேறு மரபு இனங்கள் வாழ்ந்துவரும் அரசு ஒன்றாகும். அதனுடைய அரசியல் அமைப்பு ஏற்பாடுகளும் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளும் இலங்கையை ஒத்ததாகும். மரபு இனங்கள் வைபவம் ஒன்றின் போது நூர் என்ற மரபு இனத்திற்கு அரசாங்கம் அண்மையில் பத்து ஏக்கர் காணியை நன்கொடையாக வழங்கியது. இவ்வினம் பெண்கள் தொடர்பான சில நடைமுறைகள் உட்பட பல்வேறு கலாச்சாரங்களையும் வழக்காறுகளையும் மிக நீண்ட காலமாக அனுஷ்டித்து வருகின்றது.

இவ்வினத்திடையே திருமணத்திற்கு குறைந்த பட்ச வயதெல்லை என்று இராததுடன் திருமணத்திற்கு பெண்ணுடைய சம்மதம் அவசியம் இல்லை. நூர் இனப் பெண்கள் எவ்விதமான கருத்தடை வழிமுறைகளை பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டு இருந்ததுடன் திருமணத்தை உடனடுத்து குழந்தைகளை பெற்றக்கொள்ள வேண்டும். மேலும் வீட்டைவிட்டு வெளியேறுவதாயின் தந்தை அல்லது கணவருடைய சம்மதத்தை பெற வேண்டும். எவ்வாறாயினும் பெண்களுக்கு எதிராக வன்முறை அல்லது துஷ்பிரயோகம் இவ்வினத்தினால் சகித்துக்கொள்ளப்பட முடியாததுடன் எவரேனும் ஒருவர் அத்தகைய தவறு ஒன்றிற்கு குற்றவாளியாக காணப்பட்டால் அவர் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்.

பிக்கு என்ற நூர் இனத்தைச் சேர்ந்த பெண் தனது தந்தையால் ஒழுங்கமைக்கப்பட்ட குண் என்பவனை திருமணம் செய்ய மறுத்தாள். பிக்குவுடைய தந்தை இதனைப்பற்றி மரபு இன தலைவர் ஒருவரிடம் புகார் செய்தார். மரபு இனத் தலைவர்கள் பிக்குவினுடைய திருமணத்தை அவர்களது மரபு இன சடங்குகளின் பிரகாரம் ஒழுங்கமைத்ததுடன் பிக்கு பலாத்காரமாக குண் என்பவனுடன் திருமணம் செய்து வைக்கப்பட்டாள். பிக்கு திருமணத்தை உடனடுத்து குழந்தைகளை பெற விரும்பவில்லை. இதன் விளைவாக கணவன் மனைவியிடையே வாக்குவாதங்களும் சண்டை சச்சரவுகளும் ஏற்பட்டன. ஒரு நாள் சண்டை ஒன்றின் போது குண், பிக்குவை சுத்தியல் ஒன்றினால் தாக்கினான். பிக்கு மரபு இனத்தை விட்டு தப்பிச்சென்றாள்.

(i) பிக்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் நூர் மரபு இனத்தவர்களின் நடைமுறைகளை கேள்விக்குட்படுத்த விரும்புகிறாள். அவளுக்கு எவ்வாறு ஆலோசனை வழங்குவீர்.

(13 புள்ளிகள்)

(ii) ட்ரொபிகானாவில் உள்ள பல்வேறுபட்ட மரபு இனத்தவர்களுக்கு உரித்தான முறைகள் மற்றும் வழக்காறுகள் அனைத்தையும் இல்லாமல் ஆக்க கடுமையான பொதுச்சட்டமொன்றை ஆக்க ட்ரொபிகானா அரசு தீர்மானம் ஒன்றை மேற்கொண்டது. இத்தகைய தீர்மானம் ட்ரொபிகானாவில் உள்ள மக்களிடையே அமைதியாக சேர்ந்து வாழ்வதற்குரிய வழிகளை ஏற்படுத்துமென நீர் கருதுகிறீரா. உமது விடைக்குரிய காரணங்களை தருக.

(12 புள்ளிகள்)

06 (i) மனித உரிமைகளை உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் பாதுகாக்க மனித உரிமைகள் பொறிமுறைகளின் கீழ் எடுக்கப்பட்டுள்ள சமவாயம் சார்ந்த பொறிமுறையின் பிரதான செயற்பாடுகள் எவை?

(12 புள்ளிகள்)

(ii) சமவாயம் சார்ந்த மற்றும் பட்டயம் சார்ந்த பொறிமுறைகளில் மனித உரிமைகளை வினைத்திறனுடன் பாதுகாக்க ஏற்ற பொறிமுறை என நீர் எதனை சிபாரிசு செய்வீர்? உமது விடைக்குரிய காரணங்களை தருக.

(13 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)